மொனராகலை மற்றும் புத்தல ஒருங்கிணைந்த நீர் வழங்கல் செயற்திட்டத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பெல்ஜீயம் கேபீசீ வங்கி என்விக்கும் (கேபீசீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 யூன் 16 ஆம் திகதிய கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் நிறைவேற்றல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னைய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாகவிருந்த தற்போதைய நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் மற்றும் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளது. மொனராகலை மற்றும் புத்தல நகரங்கள் மற்றும் புறநகர்ப்பிரதேசங்களிலுள்ள 50,000 வீட்டுரிமையாளர்கள் மற்றும் வர்த்தக மற்றும் கைத்தொழில் துறைகளிலுள்ள ஏனைய வாடிக்கையாளர்களுக்கு குழாய்வழி நீரினை வழங்குதல் செயற்திட்டத்தின் நோக்கமாகும். செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 5,545.48 மில்லியனுக்கு சமனான யூரோ 31.41 மில்லியன் தொகையாகும். அதில் ரூபா 2,291.76 மில்லியனுக்கு சமனான யூரோ 13 மில்லியன் கடனாகவும் ரூபா 353.27 மில்லியனுக்கு சமனான யூரோ 2 மில்லியன் மானியமாகவும் பெல்ஜியம் ஏற்றுமதி பகுதியின் கீழ் வழங்குவதற்கு கேபீசீ வங்கி என்பீயால் இணங்கப்பட்டது. ரூபா 1,590.45 மில்லியனுக்கு சமனான யூரோ 8.98 மில்லியனை வழங்குவதற்கு தேசிய சேமிப்பு வங்கி இணங்கியது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2014 திசெம்பர் 30 இல் தொடங்கப்பட்டு 2017 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்படுவதற்கு பட்டியலிடப்பட்டது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4. கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால்

மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) நிகழ்ச்சித்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான நிகழ்ச்சித்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம், நிகழ்ச்சித்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடன்களின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) நிகழ்ச்சித்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் தீர்ப்பதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஐ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2 நிதிக்கூற்றுக்கள்

## 2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(இ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தன என்றும்,
நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2007 ஆகஸ்ட் 07 இன் எம்ஔஎவ்பி/ஈஆர்டி/2007/02 ஆம் இலக்க சுற்றறிக்கையால் பேணப்பட்டவாறு 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 இல் அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், 2017 ஆகஸ்ட் 30 இலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

(அ) அரச பெறுகை வழிகாட்டியின் 8.9.3 ஆம் பந்தியில் வேண்டப்பட்டவாறு உரிய அமைச்சின் செயலாளரால் கைச்சாத்திடப்பட வேண்டிய செயற்திட்டத்தின் முறையான ஒப்பந்த உடன்படிக்கை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் தலைவரால் கைச்சாத்திடப்பட்டிருந்தது.

(ஆ) அரச பெறுகை வழிகாட்டிகளின் 5.4.12 ஆம் பந்தி, 2002 இன் 14 ஆம் இலக்க வரி அதிகாரச்சட்டத்தின் 21 ஆம் பிரிவு மற்றும் 2002 செப்தெம்பர் 30 இன் 364(3) ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தி என்பவற்றிற்கிணங்க பெறுமதி சேர் வரி கொடுப்பனவு தொடர்பான மாதாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பிரதியுடன் உள்நாட்டு இறைவரிப் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட பெறுமதி சேர் வரியின் மொத்தத்தொகை ரூபா 1.74 மில்லியன் ஆகும்.

(இ) 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஆ) ஆம் பந்தியின் பிரகாரம், 5 மில்லியன் அல்லது அதற்கு மேல் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளும் ஒப்பந்தகாரர்கள் பொது ஒப்பந்தகாரர்களின் கீழ் பதிவதற்கு வேண்டப்பட்டது. மேலும், ஒப்பந்தத்தை வழங்கி 60 நாட்களின் பின்னர், ஒப்பந்த

உடன்படிக்கையானது பொது ஒப்பந்த பதிவாளருடன் பதிவு செய்யப்பட வேண்டும். எனினும், செயற்திட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த ஒப்பந்தகாரர் மேற்கூறப்பட்ட தேவைப்பாடுகளுடன் இணங்கியிருக்கவில்லை.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதிகளின் நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2016 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கைகளில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்காக பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் – மீளாய்வாண்டின் போது | | பயன்படுத்திய நிதிகள் – 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
|---|---|---|---|---|---|---|---|
| | யூரோ மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | யூரோ மில்லியன் | ரூபா மில்லியன் | யூரோ மில்லியன் | ரூபா மில்லியன் |
| கேபீசீ - கடன் | 13.00 | 2,291.76 | 1,150.00 (கடன் மற்றும் மானியம்) | | | | |
| - மானியம் | 2.00 | 353.27 | | 2.83 | 457.99 | 9.86 | 1,552.13 |
| ஹற்றன் தேசிய வங்கி | 8.98 | 1,590.45 | | 2.74 | 444.81 | 6.52 | 1,034.06 |
| இலங்கை அரசாங்கம் | 7.43 | 1,310.00 | 131.58 | 0.71 | 115.54 | 1.48 | 232.42 |
| **மொத்தம்** | **31.41** | **5,545.48** | **1,281.58** | **6.28** | **1,018.34** | **17.86** | **2,818.61** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முகவர்களிடமிருந்து பெறப்பட்ட கடன்களின் மீள்கொடுப்பனவு தொடர்பாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் துணை நிலை கடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. எனினும், வெளிவாரி வளங்களால் பராமரிக்கப்பட்ட ஏடுகளின் பிரகாரமுள்ள ரூபா 2,586 மில்லியன் நேரொத்த பெறுமதியுடன் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 3,080.65 மில்லியன் கூட்டுத்தொகையான வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முகவர்களிடமிருந்து பெறப்பட்ட கடன்கள் மற்றும் மானியங்கள் பெறுகைகளை இணக்கஞ் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) காணிகள் சுவீகரிப்பு, வீதிகளின் புனரமைப்பு, கிராமிய நீர் வழங்கல் அபிவிருத்தி மற்றும் வரிகள் ஏனையவற்றிற்கான இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பின் கீழ் வழங்கப்பட்ட ரூபா 1,310 மில்லியன் தொகையான ஒதுக்கீட்டில், நிதிசார் மற்றும் பௌதீக சார் இலக்குகளை அடைவதற்கு தயாரிக்கப்பட்ட விரிவான செயல்நடவடிக்கைத் திட்டம் காலநேரத்தில் தயாரிக்காமையால் ஒதுக்கீட்டின் 18 சதவீதத்தை பிரதிநித்துவப்படுத்துகின்ற ரூபா 232.42 மில்லியன் தொகை மாத்திரம் 2016 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப்பட்டிருந்தது.

**3.2 பௌதீக முன்னேற்றம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தால் சமர்ப்பிக்கப்பட்ட செயல்முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதிசார் செயல்முன்னேற்றம் முறையே 98 சதவீதம் மற்றும் 58 சதவீதமாகவிருந்தது. புத்தல கும்புக்கான மற்றும் மொனறாகலவில் நீர் வழங்கல் திட்டங்களை நிர்மாணித்தல், மற்றும் வேறு பிரதேசங்களில் சுத்திகரிப்பு பொறிகள், மாற்று பிரதான மற்றும் அலுவலக கட்டிடம் விடுதிகள் மற்றும் ஏனையவற்றை நிர்மாணித்தல் போன்று பெயரிடப்பட்ட செயற்திட்டத்தின் பிரதான நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு 2017 பெப்ரவரி 01 இல் மொனறாகலவிலுள்ள தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையான செயற்பாட்டு மற்றும் பராமரிப்புப் பிரிவிற்கு கையளித்திருந்தது. எனினும், இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீட்டிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த விநியோக இணைப்புக்கள் போடுதல் 2017 ஒக்தோபர் 30 வரையிலும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 350,342 மீற்றர்கள் குழாய்களை வழங்குவதற்கு 2017 ஒக்தோபர் 30 இல் உள்ளவாறு எதிர்பார்க்கப்பட்ட போதும் அத்திகதி வரை 137,842 மீற்றர்கள் விநியோக குழாய்கள் போடப்பட்டது. சுத்திகரிக்கப்பட்ட நீர் உற்பத்தி நாளொன்றுக்கு 12,200 லீற்றர்களாக அதிகரிக்கப்பட்ட போதிலும் 2017 ஒக்தோபர் 30 வரை 2360 புதிய நீர் வழங்கலின் இணைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், சிவில் நிர்மாண வேலைகள் மீது கோரப்படாத ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தமையால் கிராமிய நீர்வழங்கல், நீர்ப்பிடிப்பு பரப்பு பாதுகாப்பு மற்றும் குழாய்களை இடுதல் ஏனையவையும் ஒப்பந்தகாரரால் மேற்கொள்ள வேண்டியிருந்தது. எனினும், ஒப்பந்தகாரர் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையுடன் 2015 நவம்பர் 30 இல் புரிந்துணர்வு விஞ்ஞாபனமொன்றில் கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் ரூபா 78.51 மில்லியனுக்கு சமனான யூரோ 500,000 கிரயத்துடன் மேற்குறிப்பிடப்பட்ட வேலைகளை மேற்கொள்வதற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது. ரூபா 62.81 மில்லியனிற்கு சமனான யூரோ 400,000 தொகை முற்பணமாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு 2016 பெப்ரவரி 29 இல் செலுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 15.70 மில்லியனிற்கு சமனான யூரோ 100,000 மேந்தலைக் கட்டணங்களாக ஒப்பந்தக்காரரிடலிருந்தது என அவதானிக்கப்பட்டது. பின்னர், உரிய வேலைகளை மேற்கொள்வதற்கு ரூபா 53.70 மில்லியன் கிரயத்தில் 04 உப ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டது. மேலும், ஒதுக்கீடானது இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட பங்களிப்பின் கீழ் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், நடைபாதைகள், மற்றும் மொனறாகவவிலுள்ள வீதிகளை நிரந்தரமாக முன்னிலை வகித்தல் தொடர்பான ரூபா 9.48 மில்லியன் பெறுமதியான வேலைகள் ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்தது என வெளிப்படுத்தப்பட்டது.

(ஆ) அரச பொறியியல் கூட்டுத்தாபனம் மற்றும் கட்டிடங்கள் திணைக்களத்திடமிருந்து சேகரிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், கும்புக்கான, கொறம்புவ மற்றும் மதுலவிலுள்ள 02 மாடி நிர்வாகக் கட்டிடம், அலுவலகக் கட்டிடம் அலுவலகர்களின் விடுதிகள் மற்றும் பாதுகாப்பு அறைகள் ஏனையவைகளின் நிர்மாணத்திற்காக பிரயாகிக்கப்பட்ட விகிதங்கள் நியம விகிதத்தை விட உயர்மட்டத்திலிருந்தது. ஆகையால், உரிய நிர்மாண வேலைகள் தொடர்பாக ரூபா 50.89 மில்லியன் தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது என கணக்கிடப்பட்டிருந்தது.

## 3.4 நிதிசார் கட்டுப்பாடு தொடர்பான சர்ச்சைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப்பிரமாணம் 626 ஆல் வேண்டப்பட்டவாறு ஒவ்வொரு செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் செயற்திட்டத்தால் பராமரிக்கப்பட்ட தனிப்பட்ட கணக்கீட்டுப் பதிவுகளை அடிப்படையாகக் கொண்டு பராமரிக்கப்பட வேண்டும். தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் பொது காசுப் புத்தகதானது மேற்குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு முரணாக செயற்திட்டத்தால் பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுகளை பதிவதற்கு பயன்படுத்தப்பட்டது.

(ஆ) செயற்திட்டத்தின் நிலையான சொத்து பதிவேடு 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையில் வேண்டப்பட்டவாறு முறையாக பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிப்பிரமாணம் 133 மற்றும் 2010 யூலை 26 இன் 05 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் உள்ளகக் கணக்காய்வு பிரிவால் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.